بسم الله الرحمن الرحيم

**Friday Sermon / வெள்ளிக் கிழமை குத்துபா 08/01/2016**

**(27 Rabi'Ul Awwal 1437 HIJRI)**

# "A GOD WHO SPEAKS AND GUIDES"

## "பேசிக் கொள்பவனும் மார்க்க வழிக்காட்டிக் கொள்பவனுமாகிய ஏக இறைவன்"



**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

உலக மக்களுக்கு சலாம் தெரியப்படுத்திய பிறகு தஷ்ஹீதும் தஅவுசும் சூரா அல்பாத்திஹாவும் ஓதியப்பிறகு இவ்வாறு தாம் உரையினை ஆரம்பித்தார்.

கடந்த காலங்களில் இறைவன் தனது சீடர்களோடு உரையாடுபவனானால் இப்போது அவன் அவர்களோடு உரையாடினாலென்ன? இன்னல் கட்டங்களில் மார்க்க வழிக்காட்டுதலுக்காக ஆட்களை இதற்கு முன் தோற்றுவிப்பது அவனது நடைமுறையாகயிருந்தால், இன்று என் அவனது மார்க்க வழிக்காட்டுதலின் வாசல் மக்களுக்காக திறக்கப்படாமல் இருப்பது? எல்லா மதங்களும் ஊழலில் புகுந்து விட்டதினாலா? அல்லது ஒரு உண்மையும் கண்டுபிடிக்க முடியாததினாலா? எந்த மதத்தை பின் பற்றினாலும் எந்த பலனும் கிடைப்பதில்லை என்பதினாலா? அல்லது பூமியில்

உண்மையான மதம் நிலை நிற்கின்றதா? அல்லது மக்கள் அதனுடைய போதனைகளை பின்பற்றாததினால் ஆத்மீக வழியில் எவ்வித வளர்ச்சியும் அடைய இயலாததினாலா?

எப்படிப்பட்ட கருத்துகளை நாம் வெளிப்படுத்திக் கொண்டாலும் கீழ்க் கூறப்படும் கேள்விகள் எப்போதும் கேட்கக் கூடியதாகும். இறைவன் ஏன் ஒரு புதிய மதத்தை உருவாக்குவதில்லை? உலகத்திற்கு அவ்வகை ஒன்று தேவையென்று இறைவன் எண்ணுகின்றான் என்றால், அதுவுமல்ல பின்பற்றக் கூடிய தனது மார்க்க தரிசனம் இங்கு நிலை நின்றிருந்தும் மக்கள் அதை கவனிக்க வில்லை என்றால், சீரான பாதையில் அவர்களை வழி நடத்த அவர்களுக்கு ஒரு சீர்திருத்தாளரை ஏன் அனுப்பவில்லை? அவ்வாறு செய்தால் அவனுடைய மகிமையை அவர்களுக்கு புரிந்துக் கொள்ளவும் அவர்களின் படைப்பின் லட்சியத்தை அடையவும் முடிந்து விடும்.

மனித குலம் தவறிலும் உலக வாழ்க்கையிலும் வீழ்ந்து கிடந்திருந்தும் அவர்களுக்கு நேர் வழி பெறுவதற்கான ஒரு நடவடிக்கையும் எடுக்காமல், கருணையாளனும், அன்பாளனுமாகிய ஒரு இறைவன் அசையாமல் இருக்கின்றான் என்று எண்ண முடியுமா? நிச்சயமாகவும் இறைவன் தாயை விடவும், தந்தையை விடவும் கருணையுடையவனாக இருக்க வேண்டும். தாய் தந்தையர் பிள்ளைகள் பெற்றெடுக்கும் வெறும் கருவிகளாவார்கள். ஆனால் இறைவன் நம்மை படைத்தவன் மட்டுமல்ல மனித நிலை நிற்பின் பெரும் லட்சியமும் அவன் மட்டுமாவான். குழந்தைக்கும் தாய்க்கும் உள்ள உறவு தற்காலிகம் மட்டும் தான். ஆனால் இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு எல்கையில்லாதது ஆகும். தாய் தந்தையரின் திறமைகளும் இவ்வுலக செல்வாக்கும் முடிந்து போவதும் அழிந்து போவதுமாகும். ஆனால் இறைவனின் ஆற்றல்கள் எல்லையற்றதும் அவனது நிதிகள் ஒரு பொழுதும் வற்றி விடாததுமாகும். தனது படைப்புகளுடன் அவ்வகையில் உறவு காட்டுவதற்கு எல்லா திறமைகளுக்கும் எஜமானானவன், தன்னுடைய படைப்புகளை அவன் மறந்து விடுவதில்லை. அவர்களின் இன்னல் கட்டங்களில் இறைவன் அசையாமல் இருப்பதில்லை. தன்னுடைய பலவீனமான படைப்புகளிடம்! பிறரோடு எளிமையாக இருக்க வேண்டுமென்று கூறுபவன், நம்மிடம் கடுமையானவனாக இருக்க முடிவதில்லை. மனுகுல ஆன்மீக முன்னேற்றத்திற்கு எவ்வழியும் காட்டாமல் அவர்களை விட்டு விடுவான் என்று எண்ணவும் முடியாது, ஒளியை தேடிச் செல்லும் போது இருளில் அலைய அவர்களை அவன் விட்டு விடுவதில்லை.

இறைவன் இருப்பானாயின் அதை அவன் அனுமதிக்க மாட்டான், தனது சேவகருடைய சோதனைக் கட்டங்களில் அவர்களோடு அவன் கருணையோடு செயல்படுவனாயின் பாதுகாப்பிற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யவில்லையென்றால் நாம் கூற வேண்டும்

மானிட சமூகத்தை நேர்மையின் பாதையில் வழி நடத்த இறைவனுக்கு ஆற்றலில்லை என்று! அல்லது பூமியில் மனிதனை படைத்ததின் லட்சியம் இறைவனுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கல்ல என்று ஒத்துக் கொள்ள வேண்டியதாக வருகின்றது. மட்டுமல்ல மனிதனை படைத்தது உண்ணவும், பருகவும் செய்து மிருகங்களைப் போல் இவ்வுலக வாழ்க்கையை அமைக்க மட்டும் என ஒப்புக் கொள்ள வேண்டியதாக வருகின்றது. ஆனால் இவ்விஷயம் அடிப்படையற்றதாகும். நாம் காணும் இப்பிரபஞ்சத்தை உருவாக்கியவனுக்கு மனித குலத்திற்கு ஆத்மீக மார்க்கத்தரிசனம் வழங்க ஆற்றல் இல்லையென்று எண்ணுவது அர்த்த மற்ற விஷயம் ஆகும். முழுமையாக, பௌதீக வாழ்க்கைக்காக மட்டும் மனிதன் படைக்கப் பட்டான் என்று எண்ணவும் முடியாது. காரணம் ஒரு வாதத்திற்காக அதை ஒப்புக் கொண்டால் நாம் இதையும் ஒப்புக் கொள்ள வேண்டும். அதாவது மிக்க அறிவுடையவனும் எல்லா அறிகின்றவனுமாகிய இறைவன் இந்த மகத்தான பிரபஞ்சத்தின் இருப்பினை வெளிப்படுத்தியது எவ்வகை லட்சியமும் இல்லாமலென்று! தானகாவே இயங்குவதற்கான எந்த இயந்திரமும் கண்டுபிடிக்கப்பட வில்லை. ஒவ்வொரு இயந்திரத்திற்கும் அழகான சட்டங்கள் இருக்கின்றது! அதை உருவாக்கியதன் லட்சியம் உண்டு!

உண்ணுவதும் பருகுவதும் தூங்குவதும் மட்டுமே மனித படைப்பின் லட்சியமென்றால் அதன் பொருள் மனிதன் படைக்கப்பட்டது கட்டுப்பாடின்றி வாழ்வதற்கு என ஒப்புக் கொள்ள வேண்டி வருகின்றது. எவ்வித லட்சியமுமில்லாமல் மனிதன் படைக்கப்பட்டானாயின் ஒன்றுக்கொன்று உதவியை வாழ்க்கையின் லட்சியமாக எண்ண முடியாது. பொதுவாக நாமொரு அனுமானத்தில் சென்றடைய கட்டாயப்படுத்தப்பட்டிருக்கின்றோம். இவ்வுலகில் ஒரு மதம் இருக்க வேண்டும். அம்மதம் மனிதனை இறைவன் பால் வழி நடத்த வேண்டும். தற்போது நிலை நிற்கும் மதங்களனைத்தும் சீரழந்திருந்தால், ஒரு புதிய மதம் (அதாவது இஸ்லாம்) மனித குலத்திற்கு மார்க்க வழிக்காட்டுதலுக்காக தோன்ற வேண்டியதுண்டு. இவ்வுலகில் ஒரு மதம் இப்போது இருப்பின் அம்மதம் மனிதனை இறைவன் பால் வழி நடத்த முடிகின்றதாக வேண்டும். ஆனால் அதனுடைய லட்சியத்தை அடைவதற்கு முடியவில்லையென்றால், காரணம் மனிதன் அதை கவனிக்க வில்லையென்றால் அப்பொழுது ஒரு சீர்திருத்தாளரை கட்டாயமாக எழுப்ப வேண்டியிருக்கின்றது. மனிதர்களின் கவனத்தைத் திருப்புவதற்கும் அவர்களை அதாவது மானிட சமுதாயத்தை அவன் பால் திரும்ப கொண்டு வரச் செய்யவும்.

அழகான ஒரு கட்டிடம் அமைத்து அதை ஆடம்பரமாக உயர்த்தி பிறகு அதை அதன் எஜமான் அதன் குறைகளை தீர்க்காமல் அது அழிந்து போக அனுமதிப்பானா? அல்லது மனிதன் ஒரு அழகான ஒரு பூந்தோப்பு அமைத்து அதற்கு நீரின்றி அழிந்து விட அனுமதிப்பானா? இவ்விஷயங்களை நாம் செய்ய வில்லையாயின் இறைவன் செய்வான் என்று எவ்வாறு எண்ண

முடியும்? அவன் மனிதனின் மோட்சத்திற்காக ஒரு முழுமையான மதத்தை வெளிப்பாட்டின் வாயிலாக அமைத்தான். பின்னர் அதை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்காமல் புறக்கணித்து விடுவான் என்று எண்ண முடியுமா? நாம் காணவில்லையா? யூத மதம் உயிருடன் இருப்பதற்கும் வெளிப்பாடுகள் வழியாக அமைத்த அம்மதத்தின் லட்சியம் முழுமைப் பெற்று விடுவதற்கு, முஸா (அ) க்குப்பின் ஒன்றின் பின் ஒன்றாக நபி மார்களை அனுப்பிக் கொண்டிருந்தான் அல்லவா? இயேசுவுக்கு பின் கிறிஸ்து மதத்தின் உண்மையான போதனைகளின் ஜீவன் உயிருள்ளவையாக இருந்திட அவன் ஆட்களை தேர்ந்தெடுத்தானல்லவா? வேதங்களின் வெளிப்பாட்டிற்கு பின் (அல்லாஹ்) அவன் ஸ்ரீகிருஷ்ணனையும், ஸ்ரீராமனையும் மற்று புனித ரிஷிமார்களையும் வேதங்களின் உண்மையான போதனைகளை சக்திப் படுத்த அவன் ஆட்களை நியாமித்தானல்லவா? சொறாஸ்டறுக்குப்பின் பேர்ஷியன் மதத்தைப் பாதுகாப்பதற்காக அவன் ஏற்பாடுகள் செய்தானல்லவா! ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) பின் அவன் தொடர்ச்சியாக புண்ணியாத்மாக்களை தீர்மானித்தானல்லவா? இஸ்லாமின் பாடங்களை விளக்குவதற்காக வெளிப்பாடின் உதவியுடன், இவ்வாறு இஸ்லாம் மதத்தை உயிரோடு இருக்க செய்கின்றானல்லவா?

ஒரே வார்த்தையில் சொன்னால் எந்த கோணத்தில் பார்த்தாலும் சரி, நாம் ஒரு தீர்மானத்தில் அடைய வேண்டி வருகின்றது. இன்றைய பூமியின் நிலையை ஆராய்ந்தால் உறுதியோடும், திடமாகவும் நம்மால் கூற இயலும். இறைப் போதனம் பெற்ற ஒரு வழி காட்டி மக்கள் தேர்ந்தெடுத்த ஒரு வழிக்காட்டியல்ல (மட்டுமல்ல இந்த தேர்வு ஒரு கூட்டம் மக்களின் வரம்புக்கு உட்பட்டதாகும்.) இஸ்லாமினுடையவும் மனித குலத்தினுடைய சீராமைப்பாளராக இறைவனில் நின்று ஒரு தெய்வ தூதனின் தேவை அவசியமாகும். அது மூலம் அதிகாரம் கையடக்கிய குடும்ப பாரம்பரியத்திற்கு மூக்குக்கயிறு போடுவதற்கும், இறைச்சட்டத்தை உதைத்து தள்ளாமலும் இருப்பதற்காக. உதாகரணமாக இக்காலக் கட்டத்தில் நாம் ஒருவரைக் காண்கிறோம். அன்னார் அதிகாரத்திலிருக்கின்றார். அவர் உம்மத்து நபி என்றும் முஜத்தீத் என்றும், கலீ∴பா என்றும்! இறைவழிக்காட்டுதலான்றி எண்ணகிறார். நீங்கள் நீஜமாகவே உண்மையைத் தேடுபவராகயிருந்தால், அல்லவோ எனது சிநேகிதர்களோ உங்களின் கால கட்டத்தில் இறைப்போதனம் பெற்ற வழிக்காட்டியை தேடுங்கள், அவர் தூய ஆன்மாவுமாக வருகின்றார். இறைவனுடன் உண்மையான வகையில் அளவில்லா ஆன்மீக அன்பு வைத்திருக்கும் மனித ஆத்மாக்கள் எதிர்பார்ப்போடு தங்களின் கண்களை விண்ணை நோக்கி திரும்புவதும் வலியோடும், கவலையோடும் தங்களின் படைத்தவனை தேடுவதும் விழிகள் கண்ணீரால் நனைவதும் அப்போது அவன் அவர்களின் பால் கருணையோடு

திரும்புகின்றான். அவர்களின் முன்னோர்களுக்கு வழங்கப்பட்டதைப்போல் அவர்களுக்கும் வழங்கப்படுகின்றது. அவனது அருட்களுடையவும் கருணையுடையவும் வாசல் அவர்களுக்காக திறக்கப்படுகின்றது. அவர்களில் நின்று ஆன்மீக குருட்டை நீக்கம் செய்தும் அவர்களின் உள்ளங்களிலும் கண்களிலும் ஒழிந்திருந்த குருட்டையும் தூசிகளையும் அப்புறப்படுத்தியும் எல்லையில்லா வாழ்க்கையில் அவர்களை வழி நடத்துகின்றான். அதுவே மனித படைப்பின் லட்சியம். உலகத்தில் இறை வெளிப்பாடுகளுடன், இஸ்லாமின் கொடியின் கீழ் நிலைக் கொள்ளும் ஒரே ஒரு அமைப்பு ஜமாத்துல் சஹீஹில் இஸ்லாம் மட்டுமாகும். அது இறைவனுடைய மதமாகும். இறைவனுடைய பாதுகாப்பிலுமாகும். ஆத்மீக வாழ்க்கையில் தாகமுடைவர்களே! இறை பாதுகாப்பின் கீழ் வாருங்கள். நான் சந்தேஷமானச் செய்தி அறிவிக்கின்றேன். ஆத்மீகவுலகில் உங்களுக்கு தேவையானது எதுவோ அதை வழங்குவதற்காக ஜமாத்துல் சஹீஹில் இஸ்லாம் வந்திருக்கின்றது.

இறந்தவர்களுக்கு ஆத்மீக உயிர் கொடுப்பவர் குருடர்களுக்கு ஆத்மீக பார்வை வழங்குபவர் செவிடர்களுக்கு ஆத்மீக கேள்வி சக்தி வழங்குபவர் அவ்விதம் பல திறமையுள்ள ஆத்மீக சிகிச்சைகள் (அதாவது இறைவனின் எளிய சேவகன் ) இறைவனில் நின்று இதோ வந்திருக்கின்றார். இக்காலத்தின் தேவையைப் பொறுத்து, நமது அன்பிற்குரிய தூதர் ஹஸ்ரத் முஹம்மது (ஸ) வின் முன்னறிவிப்பை தொடர்ந்து! அபூஹீரைரா (ரலி) விவரிக்கின்றார். முஹம்மது (ஸ) கூறினார். **“இந்த உம்மத்திற்காக இந்த உம்மத்தில் நின்று ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இறைவனுடைய சீர்திருத்தாளர் அவதரிப்பார்”**! அபுதாவுத்.

அது போல் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸாகுலாமும் (அ) முஸ்லீஹ் மவூத் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருதீன் மஹ்மூத் அஹ்மது (ர) ம் முன்னறிவிப்பு செய்திருக்கின்றார்கள் அல்லாஹ் தேர்நதெடுத்தவர்கள் மனிதர் தேர்ந்தெடுதத்வர்களைப் போல் அல்ல. அல்லாஹ் தேர்ந்தெடுப்பவர் அல்லாஹ்வில் நின்று பரிசுத்த ஆன்மாவாக வருவார். பாவ இருளில் நின்று தரணியைக் காப்பதற்கும் அவர்களை மோட்சத்தில் வழி நடத்தவுமாகும். கவனியுங்கள்! ஏய் மக்களே பாதுகாப்பேன் என்று இறைவன் வாக்குறுதி அளித்த ஒரே ஒரு மதம் இஸ்லாம் மட்டுமாகும். அவன் அதை பாதுக்காத்துக் கொண்டிருக்கின்றான். ஆகையால் இறைவன் தேர்ந்தெடுத்த ஒரேவொரு மதம், நிச்சயமாகவும் சஹீஹில் இஸ்லாம் ஆகும். அந்த ஜமாத் இஸ்லாமின் அதே வேரில் நின்று வந்ததாகும். அது மனித குலத்திற்கனைத்தும் மார்க்கத் தரிசனம் வழங்குவதற்காக நமது நேரத்தில் காத்திருந்ததுமாகும். விஷயம் இவ்வாறில்லையெனில் இறைவன் எதற்காக அதற்கு பாதுகாப்பு வழங்கியதும், பிற மதங்கள் எதிர்க்க முடியாமலாக்கியதும், அவர்களுக்கு பாதுகாப்பு வழங்காததும்.

ஆகையால் உண்மையைத் தேடுபவர்களே! இதற்கு முன் நான் உங்களிடம் பலத்தவணைக் கூறியது போல் நான் ஒரு புதிய மதம் கொண்டு வந்த ஆள் அல்ல. என்னை தேர்ந்தெடுத்தது இஸ்லாமின் உண்மையான போதனைகளை நிலை நிறுத்துவதற்காகும், இஸ்லாமிற்கு ஊழியம் செய்வதற்காகும், இஸ்லாமை மீண்டும் சக்திப்படுத்துவதற்காகும், இஸ்லாமை பிரச்சாரம் செய்வதற்காகும், மனித குலத்தை இஸ்லாமின் மூலம் இறைவன் பால் வழி நடத்ததுவதற்காகும். எல்லா வல்ல இறைவன் உங்களின் களங்கமற்ற உள்ளங்களின் வாயிலாக உண்மையின் பால் உங்களை வழி நடத்தட்டும். ஆமீன்.

**Issued by:**

**Jamaat Ul sahih Al Islam Dawa Department**

**Tamil Nadu, India (Regd. No. A/693)**

**Web: www.jamaat-ul-sahih-al-islam.com**

**Translated by:**

**Abdhul Sudeer**

**Proof Reader:**

**Azim Ahmad**

**E-mail: azimahmad070@gmail.com**

**Cell: 9789180817, 9947181650**